# யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினால் நடாத்தப்படும்

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை – 2015 ஓகஸ்ட்**

## மாதிரி வினாத்தாள் - 1

| | | |
|---|---|---|
| **புவியியல் - II**<br>**Geography - II** | **22 T II** | **மூன்று மணித்தியாலங்கள்**<br>**Three hours** |

❖ **பகுதி I, II ல் இருந்து இவ்விரு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக 5 வினாக்களுக்கு விடையளிக்குக.**

### பகுதி I - பௌதிகப் புவியியல்

1) i) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் எரிமலை வலயங்களின் உலகப் பரம்பலைக் குறித்துக் காட்டுக (2 புள்ளி)

ii) இந்தப் பரம்பற் பாங்கிற்கான காரணிகளைப் பரிசீலிக்குக. (5 புள்ளி)

iii) எரிமலை நிலவுருவங்கள் நான்கினைத் தெரிவு செய்து அவற்றின் உருவாக்கச் செயன்முறைகளை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. (8 புள்ளி)

iv) எரிமலையின் செயற்பாட்டினால் ஏற்படும் சமூக பொருளாதாரப் பாதிப்புக்கள் இரண்டினை விளக்குக

2) i) கடற்கரையொன்றின் பிரதான பிரிவுகளைக் காட்டுவதற்கு குறுக்குவெட்டுமுகம் ஒன்று வரைந்து அவற்றுள் ஒவ்வொரு பிரிவுகளையும் பெயரிடுக. (2 புள்ளி)

ii) கடலலையின் தின்னற் செயல்முறைகளைத் தருக (4 புள்ளி)

iii) அலைகளின் தொழிற்பாட்டினால் உருவாகின்ற இரு தின்னல் நிலவுருவங்களை வரை படங்களின் உதவியுடன் விளக்குக. (6 புள்ளி)

iv) அலைகளின் தொழிற்பாட்டினால் உருவாகின்ற நான்கு படிதல் நிலவுருவங்களின் உருவாக்கச் செயன்முறையினை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. (8 புள்ளி)

3) i) கோள வெப்பமாதல் என்பதன் கருத்தை விளக்குக. (3 புள்ளி)

ii) புவியை வெப்பமாக்கும் பச்சை வீட்டு வாயுக்கள் நான்கினைப் பெயரிட்டு அவற்றில் இரண்டினை விளக்குக.

iii) பூகோள வெப்பம் அதிகரிப்புக்கான 3 காரணிகளைத் தந்து அவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களை சுருக்கமாக ஆராய்க. (6 புள்ளி)

iv) புவி வெப்பமடைவதனைக் குறைப்பதற்கு உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாகத் தருக. (5 புள்ளி)

4) i) மண் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைத் தருக. (2 புள்ளி)

ii) மேலே நீர் குறிப்பிட்ட ஏதாவது இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளி)

iii) இலங்கையின் ஈரவலயத்தில் காணப்படும் பிரதான மண்வகைகள் நான்கினைப் பெயரிடுக. (4 புள்ளி)

iv) பகுதி (iii) இற்கு உம்மால் பெயரிடப்பட்டவற்றுள் எவையேனும் இரு மண் வகைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றினை விபரிக்குக. (8 புள்ளி)

## பகுதி II - மானிடப் புவியியல்

**5)** i) மையக்கரு (Nucleated) கிராமியக் குடியிருப்பு ஒன்றின் முனைப்பான நான்கு அம்சங்களைக் குறிப்படுக (3 புள்ளி)

ii) மையக்கரு கிராமியக் குடியிருப்புக்களில் உள்ள மாற்றங்களுக்குப் பொறுப்பான எவையேனும் நான்கு காரணிகளை (நகரமயமாக்கல் தவிர்ந்த) ஆராய்க. (6 புள்ளி)

iii) கிராமியக் குடியிருப்பு நகரக்குடியிருப்புப் பண்புகளை ஒப்பிட்டு நோக்குக (6 புள்ளி)

iv) இலங்கையில் நகராக்க வளர்ச்சி மட்டம் குறைந்து செல்வதற்குரிய காரணிகள் எவை என்பதனைச் சுருக்கமாகத் தருக (5 புள்ளி)

**6)** i) நீர் வழங்கும் நவீன தொழில் நுட்பங்கள் 2 தருக (2 புள்ளி)

ii) இலங்கையில் விவசாயத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்ட பயிர் வகைகளைத் தருக (3 புள்ளி)

iii) இலங்கையின் நெற் செய்கையில் பசுமைப்புரட்சியின் செல்வாக்கினைப் பரிசீலனை செய்க (8 புள்ளி)

iv) இலங்கையில் சேதனப்பயிர்ச் செய்கையின் முக்கியத்துவம் பற்றி விளக்குக (7 புள்ளி)

**7)** i) தகவல் தொழில்நுட்பம் என்றால் என்ன? (3 புள்ளி)

ii) தகவல் தொழில்நுட்பச் செயற்பாடுகள் எவை (3 புள்ளி)

iii) தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைகளை சுருக்கமாக ஆராய்க (6 புள்ளி)

iv) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயன்பாடு வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் பூகோளரீதியில் சமூகபொருளாதார சமனற்ற தன்மைகளின் அதிகரிப்பிற்கு இட்டுச் செல்கின்றதா எனப் பரிசீலிக்குக (8 புள்ளி)

**8)** i) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் கப்பல் கட்டும் கைத்தொழிலில் முக்கியத்துவம் பெற்ற ஆறு இடங்களைக் குறித்துப் பெயரிடுக. (3 புள்ளி)

ii) பிரித்தானியா அல்லது ஐக்கிய அமெரிக்காவில் இந்தக்கைத் தொழிலின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்த மூன்று காரணிகளை ஆராய்க (6 புள்ளி)

iii) கப்பல் கட்டும் தொழிலின் நவீன போக்குகளை பரிசீலிக்குக (6 புள்ளி)

iv) கப்பல் கட்டும் தொழில் சார்ந்த பிரச்சினைகளைத் தருக. (5 புள்ளி)